சுருக்கம்

வேளாண்மை – "உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் அங்கக உர பரிசோதனை ஆய்வகங்கள் மூலம் உரக்கட்டுப்பாட்டு ஆணை செயல்படுத்துதல் திட்டத்தினை 1.4.2019 முதல் 31.3.2020 வரை தொடர்ந்து செயற்படுத்த ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வே.உ.3) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2050, புரட்டாசி மாதம் 06ஆம் நாள்

அரசாணை (2ப) எண். 188 நாள்:23.09.2019

படிக்கப்பட்டது:

1. அரசாணை (2டி) எண் 131, வேளாண்மைத் (வேஉ3) துறை, நாள் 06.08.2018
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.ஆகூபி 1/36393/2019, நாள் 12.06.2019

******

ஆணை:–

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழகத்தில் திருச்சி, கோவில்பட்டி, காஞ்சிபுரம், பரமக்குடி, உதகமண்டலம், கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில், தர்மபுரி, சேலம், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் ஆகிய 14 இடங்களில் செயல்பட்டு வரும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 அங்கக உர பரிசோதனை ஆய்வகங்களுக்கான திட்டத்தை 01.04.2018 முதல் 31.03.2019 வரை தொடர்ந்து செயற்படுத்த ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநரின் கடிதத்தில், உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985–இன்படி, உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்கு வரும் உரத்திலிருந்து எடுக்கப்படும் மாதிரிகளை பகுப்பாய்வு செய்து, (வருடத்திற்கு 19,600 எண்கள்) விவசாயிகளுக்குத் தரமான உரங்கள் கிடைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாட்டில் 14 இடங்களில் (திருச்சி, தூத்துக்குடி, காஞ்சிபுரம், இராமநாதபுரம், நீலகிரி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, கன்னியாகுமரி, தர்மபுரி, சேலம், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் விழுப்புரம்) உரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் செயல்படுகின்றன என்றும், இதன் விளைவாக தரமான உரங்கள் விவசாயிகளுக்கு கிடைக்க வழி வகை செய்யப்படுவதால், விவசாயிகள் பெரிதும் பயனடைகின்றனர் என்றும், இதன் மூலம் விவசாயிகள் நஷ்டமடைவது தடுக்கப்படுவதுடன், விளைபொருள் உற்பத்தியும் இலாபமும் அதிகரிக்கப்படுவதாகவும், போலியான உர உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தண்டிக்கப்பட வழிவகை உள்ளதாகவும், வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள 2 அங்கக உர ஆய்வகங்கள், உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985–ன்படி உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வரும் அங்கக உரங்களிலிருந்து எடுக்கப்படும் மாதிரிகளை பகுப்பாய்வு செய்து (வருடத்திற்கு 1440 எண்கள்)

(த.பி.பா)

விவசாயிகளுக்கு தரமான அங்கக உரங்கள் கிடைக்கும் நோக்கில் செயல்படுகின்றன என்றும், இத்திட்டத்திற்கான நிதி 2019–2020–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து, "உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் அங்கக உர பரிசோதனை ஆய்வகங்கள் மூலம் உரக்கட்டுப்பாட்டு ஆணையை செயல்படுத்துதல்" திட்டத்தினை 2019–2020–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக தொடர் நீட்டிப்பும் நிதி ஒப்பளிப்பும் செய்து ஆணை வழங்குமாறும் வேளாண்மை இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலித்து, அதனை ஏற்று, 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 அங்கக உர ஆய்வகங்களுக்கான திட்டத்தினை 2019–2020ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக, மேற்படி திட்டத்தை 01.04.2019 முதல் 31.03.2020 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள திட்டம் குறித்த செலவுகள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| | | |
|---|---|---|
| 1 | 2435 – Other Agricultural Programmes – 01 – Marketing and Quality Control 101 – Marketing Facilities – State's Expenditure – AA – Administration of Fertilizer Control Order.<br><br>(Old DPC: 2435-01-101-AA-0006)<br>(IFHRMS DC:2435-01-101-AA-30000) | ரூ.359.13 லட்சம் |
| 2 | 2435 – Other Agricultural Programmes – 01 – Marketing and Quality Control 102 – Grading and Quality Control Facilities – State's Expenditure – AO – Establishment of Fertilizer Control Laboratory.<br><br>(Old DPC: 2435-01-102-AO-0006)<br>(IFHRMS DPC:2435-01-102-AO-30000) | ரூ.52.87 லட்சம் |
| 3 | 2401 – 00 – Crop Husbandry – 105 – Manures and Fertilizers – State's Expenditure - AA – Compost Development including Local Manurial Resources controlled by Director of Agriculture.<br><br>(Old DPC: 2401-00-105-AA-0009)<br>(IFHRMS DPC:2401-00-105-AA-30000) | ரூ.11.50 லட்சம் |
| 4 | 2401 – 00 – Crop Husbandry – 109 – Extension and Farmers Training – State's Expenditure – AK – Training and Visits.<br><br>(Old DPC: 2401-00-109-AK-0001)<br>(IFHRMS DPC:2401-00-109-AK-30000) | ரூ.80.39 லட்சம் |

(த.பி.பா)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

6. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.எண்.40418/வேளாண்மை/2019, நாள் 17.09.2019–ல் ஒப்புதலை பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில முதன்மை கணக்காயர் (A&E/G&SSA/E&RSA/C&RA/AAD),
சென்னை 18.(பெயரில்)

<u>நகல்:–</u>
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், வேளாண்மைத்துறை, சென்னை–9.
நிதித் (வேளாண்மை) துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3)த்துறை, சென்னை–9.
உதவி நிரல் அலுவலர் (Assistant Programmer), வேளாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்